සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2019

නාට්‍ය හා රංග කලාව I, II
நாடகமும் அரங்கியலும் I, II
Drama and Theatre I, II

**10.12.2019 / 1300 - 1610**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## நாடகமும் அரங்கியலும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நாடகத்தின் மூலக்கூறுகளுள் பிரதானமான ஒன்றாக அமைவது,
(1) எழுத்துரு ஆகும். (2) நடிப்பு ஆகும்.
(3) வேட உடை ஆகும். (4) காட்சி விதானிப்பு ஆகும்.

**2.** தொழினுட்பத்துடன் தொடர்புடையதும் கேட்போரின் மனதை அரங்காகக் கொண்டதுமான வடிவம்
(1) தொலைக்காட்சி நாடகம் (2) சினிமா
(3) மேடை நாடகம் (4) வானொலி நாடகம்

**3.** ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டாகக் கொள்ளத்தக்கது,
(1) கோழி கோட்டான் ஆகும். (2) ஆடும் வீடும் ஆகும்.
(3) குருட்டு ஆட்டோ ஆகும். (4) பஸ் ஆகும்.

**4.** பின்வருவனவற்றுள் சிறுவர் நாடகப் பாடல்
(1) "சின்னச் சின்னக் குருவிகள்..." (2) "மனிதர்கள் உயிர்க்க வேண்டும்..."
(3) "பண்புதான் எங்கள் செல்வம்..." (4) "என்னடி உந்தன் கோப்பியில்..."

**5.** குரல்வழிச் சித்திரிப்பின்போது கவனிக்கப்பட வேண்டியவை,
(1) மெய்நிலைகள், அசைவுகள் என்பனவாகும். (2) வீச்சு, புறத்தெறிகை என்பனவாகும்.
(3) உடல்தளர்வு, லாவகம் என்பனவாகும். (4) மெய்யசைவு, லலிதம் என்பனவாகும்.

**6.** பாத்திரம் ஒன்றின் சமூகவியற் பண்புகளுள் உள்ளடங்குபவை,
(1) பால், வயது, உயரம் என்பனவாகும்.
(2) மனநிலை, நடத்தைகள், பழக்கவழக்கங்கள் என்பனவாகும்.
(3) தொழில், அந்தஸ்து, சமயம் என்பனவாகும்.
(4) பருமன், விருப்பு வெறுப்புகள், தோற்றம் என்பனவாகும்.



For More Past Papers : tamilguru.lk

7. ஆற்றுகைக் கலைகள் தொடர்பான கூற்றுகளுள் **பொருத்தமற்றது**
   (1) ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித் தொடர்பைக் கொண்டது
   (2) பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்துவது
   (3) கணப்பிரசன்னமானது
   (4) படைப்பிலிருந்து படைப்பாளியைப் பிரித்து நோக்கவல்லது

8. நடிகரின் இயற்கையான சாரீர வளத்திலும் இசை ஞானத்திலும் பெரிதும் தங்கியுள்ள கலைவடிவம்
   (1) பார்ஸி வழி அரங்கு (2) பலே
   (3) ஊம நாடகம் (4) நவீன நாடகம்

9. நியமமில் அரங்கில் நடிகர் தெரிவிற்காகப் பெரிதும் பயன்படுத்தப்பெறும் நுட்பங்களுள் ஒன்று
   (1) திறந்த தெரிவு (2) மூடிய தெரிவு
   (3) புதிதளித்தல் (4) சல்லடைத் தெரிவு

10. நாடக ஆற்றுகையின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் பெரிதும் பங்கெடுப்போர்
   (1) நெறியாளர் (2) பார்ப்போர்
   (3) தயாரிப்பாளர் (4) நாடகாசிரியர்

11. சுற்றிவரப் பார்ப்போரைக் கொண்ட பாரம்பரிய அரங்க வெளி
   (1) கிரேக்கப் பேரரங்கு (2) கரளிய அரங்கு
   (3) தெருக்கூத்து அரங்கு (4) வட்டக்களரி அரங்கு

12. கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்கு
   (1) சூரன் போர் (2) குளிர்த்தி
   (3) வேட்டைத் திருவிழா (4) மானம்பூ

13. அண்ணமார் வழிபாட்டுடன் தொடர்புடையதும் குழந்தைவரம் வேண்டி ஆடப்படுவதுமான தமிழ்க் கூத்து வடிவம்
   (1) ரட்டயகும (2) சொக்கரி (3) பொன்னர் சங்கர் (4) காமன்கூத்து

14. 'கந்தார்த்தம்' எனும் பாடல் மெட்டு அதிக முக்கியத்துவம் பெறும் கூத்து மரபு
   (1) வடபாங்கு (2) தென்பாங்கு (3) வடமோடி (4) வசந்தன்

15. கட்டிளமைப் பருவத்து மாணவரின் மனவெழுச்சிப் பிரச்சினையைக் கதைப்பொருளாகக் கொண்ட நாடகம்
   (1) புதியதொரு வீடு (2) எந்தையும் தாயும்
   (3) இராவணேசன் (4) ஆரொடு நோகேன்

16. மோடிமைத் தன்மையையும் கலைஞரின் கற்பனைக்கு அதிக இடமளிக்கும் தன்மையையும் கொண்டமைந்துள்ள நாடகங்களின் தொகுதி
   (1) சக்தி பிறக்குது, நம்மைப் பிடித்த பிசாசுகள்
   (2) புதியதொரு வீடு, சுந்தரம் எங்கே
   (3) ஆரொடு நோகேன், எந்தையும் தாயும்
   (4) உறவுகள், கோடை

17. வடபாங்கு கூத்துகளில், பெரும்பாலும் கதைச்சுருக்கத்தினை அறிமுகம் செய்யும் பாத்திரம்
   (1) கட்டியக்காரன் (2) பபூன்
   (3) புலசந்தோர் (4) கோமாளி

18. தனித்துவமும் விறுவிறுப்புமுடைய ஆடற்கோலத்தைக் கொண்ட வஞ்சிப்பத்தன் எனும் பாத்திரம் இடம்பெறும் கூத்து வடிவம்
   (1) காமன் கூத்து (2) கோவலன் கூத்து
   (3) காத்தவராயன் கூத்து (4) பறைமேளக் கூத்து


For More Past Papers : tamilguru.lk

**19.** 'அம்பா' பாடல்கள் எச்சமூகத்தினரின் வாழ்வியலோடு தொடர்புடையவை
(1) விவசாயிகள் (2) வியாபாரிகள்
(3) தோட்டத்தொழிலாளர்கள் (4) மீனவர்கள்

**20.** ஆரொடு நோகேன் நாடகத்தில் இடம்பெறும் படிப்பு மேசை, நிலைக்கண்ணாடி, தையல் இயந்திரம் என்பன உள்ளடக்கப்படும் சித்திரிப்பு வகை,
(1) காண்பியவழி ஆகும். (2) உணர்ச்சிவழி ஆகும்.
(3) உடல்வழி ஆகும். (4) குரல்வழி ஆகும்.

**21.** மாயன், மாசிலன், மறைக்காடர் ஆகிய பாத்திரங்களைக் கொண்ட நாடகத்தினை எழுதியவர்,
(1) நா. சுந்தரலிங்கம் ஆவார். (2) இ. சிவானந்தன் ஆவார்.
(3) மஹாகவி து. உருத்திரமூர்த்தி ஆவார். (4) இ. முருகையன் ஆவார்.

**22.** "வெறுவான வெளிமீது அலைவந்து சீறும்
வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்."
எனும் வரிகள் இடம்பெற்ற நாடக வகை,
(1) நிருத்திய நாடகமாகும். (2) பா நாடகமாகும்.
(3) பாடசாலை நாடகமாகும். (4) சிறுவர் நாடகமாகும்.

**23.** மூப்பன் எனும் பாத்திரம் இடம்பெறும் கூத்து,
(1) வசந்தன் கூத்து ஆகும். (2) மகிடிக் கூத்து ஆகும்.
(3) காமன் கூத்து ஆகும். (4) பறைமேளக் கூத்து ஆகும்.

**24.** பின்வருவனவற்றுள் 'பா' நாடகத் தொகுதியுள் அடங்குபவை,
(1) புதியதொரு வீடு, சக்தி பிறக்குது, மழை என்பனவாகும்.
(2) புதியதொரு வீடு, ஆரொடு நோகேன், சங்கிலி என்பனவாகும்.
(3) புதியதொரு வீடு, கோடை, முற்றிற்று என்பனவாகும்.
(4) புதியதொரு வீடு, சுந்தரம் எங்கே, சக்தி பிறக்குது என்பனவாகும்.

**25.** இராவணேசன் ஆற்றுகையில் இடம்பெறும் "வீரம் வீரம் என்று விரும்பியுரைத்தீர் என் ஐயா..." எனும் பாடலில் மேலோங்கியிருக்கும் உணர்வு,
(1) கோபம் ஆகும். (2) சோகம் ஆகும். (3) வெறுப்பு ஆகும். (4) வீரம் ஆகும்.

**26.** ஈழத்து இசைநாடகத் துறையில், பெரும்பாலும் பெண்பாத்திரம் ஏற்று நடித்துப் புகழ்பெற்றவர்,
(1) வி. என். செல்வரத்தினம் ஆவார். (2) நடிகமணி வி. வி. வைரமுத்து ஆவார்.
(3) ஜோன் கவாஸ் ஆவார். (4) பொன்னாலைக் கிருஸ்ணன் ஆவார்.

**27.** யாழ்ப்பாணப் பேச்சுமொழி முதன்முதலில் கையாளப்பட்டதாகக் கொள்ளத்தக்க நாடகங்கள்
(1) அபசுரம், விழிப்பு (2) உறவுகள், எந்தையும் தாயும்
(3) சுந்தரம் எங்கே, உடையார் மிடுக்கு (4) சக்தி பிறக்குது, மழை

**28.** சோக உணர்வைத் தோற்றுவிப்பதற்கு மிகப் பொருத்தமான இசைக்கருவி,
(1) மிருதங்கம் ஆகும். (2) உடுக்கு ஆகும். (3) சல்லாரி ஆகும். (4) வயலின் ஆகும்.

**29.** அரங்கில், பார்ப்போர் ஒருவர் பெறும் அனுபவத்தினைப் பரதர் குறிப்பிடுவது,
(1) கதாஸிஸ் ஆகும். (2) ரஸம் ஆகும். (3) யூஜின் ஆகும். (4) ரஸவாதம் ஆகும்.

**30.** பின்வருவோருள் புலம்பெயர் அரங்கச் செயற்பாட்டாளர்களாக விளங்குவோர்
(1) நா. சுந்தரலிங்கம், க. கணபதிப்பிள்ளை (2) இ. முருகையன், இ. சிவானந்தன்
(3) க. பாலேந்திரா, க. சிதம்பரநாதன் (4) அ. தாசீசியஸ், க. பாலேந்திரா

**31.** பின்வருவனவற்றுள் குதிரையின் குளம்பொலியைத் தோற்றுவிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான பொருள்
(1) சிரட்டை (2) மெல்லிய தகரம்
(3) பேனா (4) எக்ஸ்ரே-தாள்



For More Past Papers : tamilguru.lk

**32.** நாடகத்தில் வேட உடையின் பிரதான பண்பாக அமைவது,
(1) எப்போதும் பகட்டும் ஆடம்பரமும் நிறைந்திருப்பதாகும்.
(2) பாத்திரப்பண்பு மற்றும் நாடக மோடியை வெளிப்படுத்துவதாகும்.
(3) நடிகரை அழகுபடுத்துவதாகும்.
(4) யதார்த்தப் பண்பை மட்டும் கொண்டிருப்பதாகும்.

**33.** நாடகத்தில் ஒப்பனையின்போது ஒட்டுவதற்கு மிகப் பொருத்தப்பாடுடையது,
(1) பைண்டர்கம் ஆகும். (2) மாப்பசை ஆகும்.
(3) சுப்பர்குளு ஆகும். (4) ஸ்பிறிட்கம் ஆகும்.

**34.** மேடைவெளி முழுமையையும் அரங்கப் பின்னணியையும் ஒளியூட்டுவதற்குப் பயன்படுத்தப்பெறும் பொருத்தமான ஒளியூட்டல் சாதனம்
(1) பெருக்கொளி (2) பொட்டொளி
(3) வர்ணச்சில்லு (4) மங்கலாக்கி

**35.** நடிகர் வரவு, வெளியேறுகை மற்றும் இசை தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய ஒளி நினைவுக் கையேடு
(1) நேரக்குறிப்பு ஆகும். (2) வரிக்குறிப்பு ஆகும்.
(3) செயற்பாட்டுக்குறிப்பு ஆகும். (4) காலக்குறிப்பு ஆகும்.

**36.** பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.
A - தவக்காலப் பகுதியில் நிகழ்த்தப் பெறுவது
B - முழுக்கிராமமும் இணைந்து அளிக்கை செய்யப் பெறுவது
C - மனிதரும் பொம்மைகளும் இணைந்த அளிக்கைப் பாங்கு கொண்டது
மேற்படி கூற்றுகளுள் A, B, C என்பன குறித்து நிற்பது முறையே,
(1) சூரன்போர், பாஸ்கா, பாண்டவர் வனவாசம் என்பனவாகும்.
(2) பாஸ்கா, பாண்டவர் வனவாசம், சூரன்போர் என்பனவாகும்.
(3) பாஸ்கா, சூரன்போர், பாண்டவர் வனவாசம் என்பனவாகும்.
(4) பாண்டவர் வனவாசம், சூரன்போர், பாஸ்கா என்பனவாகும்.

● A, B, C, D ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள படங்களை ஆதாரமாகக் கொண்டு இலக்கம் **37** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.



A



B



C



D

**37.** சிங்கள நாட்டார் அரங்கைக் குறிப்பது,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

**38.** கையில் துணி கொண்டு ஆடும் ஆட்ட வகையைக் குறிப்பது,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

**39.** ஒட்டுசுட்டான் தான்தோன்றியீஸ்வரர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படும் சடங்கைக் குறிப்பது,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

**40.** மாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்கைக் குறித்து நிற்பது,
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.


For More Past Papers : tamilguru.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

විෂයය අංකය / பாட இலக்கம்: **51** විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 3 | 31. | 1 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 3 | 23. | 4 | 33. | 4 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 3 | 34. | 1 |
| 05. | 2 | 15. | 4 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 3 | 37. | 4 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 4 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 2 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 4 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40



For More Past Papers : tamilguru.lk

ஸியலு ம ஹிமிகம் ஆவிரிணி / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**51 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

නාට්‍ය හා රංග කලාව **I, II**
**நாடகமும் அரங்கியலும் I, II**
Drama and Thearte **I, II**

## நாடகமும் அரங்கியலும் II

※ **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) அரங்கச் செயற்பாட்டில் நிதி, நிர்வாகம் மற்றும் தொடர்பாடல் திறன் போன்றவற்றோடு அதிக தொடர்புடையவர் எவ்வாறு அழைக்கப்படுவார்? (01 புள்ளி)

(ii) கோலம் ஆற்றுகை நிகழ்த்தப்பெறும் அரங்க வெளியின் பெயர் யாது? (01 புள்ளி)

(iii) கூத்தினை நெறிப்படுத்துபவர் எப்பெயரால் அழைக்கப்படுவார்? (01 புள்ளி)

(iv) யப்பானிய நாடகங்களைப் பார்க்கும் ஒருவருக்குக் கிடைக்கும் அனுபவம் யாது? (01 புள்ளி)

(v) ஊமச் செயற்பாட்டின்போது அதிகளவில் வெளிப்படுத்தப்படும் சித்திரிப்பு யாது? (01 புள்ளி)

(vi) திரௌபதி அம்மன் சடங்குடன் தொடர்புடைய மலையகக் கூத்து ஒன்றின் பெயர் தருக. (01 புள்ளி)

(vii) "மொட்டைத் தலையுடன் ஒற்றைப் பிராமணன் முன்னிதோ வாறானே..." எனும் பாடல் இடம்பெறும் நாடகத்தின் பெயர் யாது? (01 புள்ளி)

(viii) 'நாமிருக்கும் நாடு நமது' எனும் நாடகத்தின் ஆசிரியர் யார்? (01 புள்ளி)

(ix) பொட்டொளியின் இரு வகைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(x) நாடகத்தின் பிரதான மோடிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**2.** (i) நெறியாள்கை எனும் எண்ணக்கருவினால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (03 புள்ளிகள்)

(ii) நடிபாகமளித்தலில் நெறியாளர் ஒருவரின் வகிபங்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) நாடக மூலக்கூறுகளை இணைப்பாக்கம் செய்வதில் நெறியாளர் ஒருவரின் படிமுறைச் செயற்பாட்டினை உமது அரங்க அனுபவத்தினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) நாடகத்தில் கையாளப்படும் துணைக்கலைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) நாடகத்தயாரிப்பு ஒன்றில் துணைக்கலைகளைத் திட்டமிடும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) அரங்க அழகியலில் துணைக்கலைகளின் முக்கியத்துவத்தினை செய்முறை அனுபவத்தின் ஊடாக விளக்குக. (05 புள்ளிகள்)



For More Past Papers : tamilguru.lk

**4.** மஹாகவி து. உருத்திரமூர்த்தியால் எழுதப்பெற்ற புதியதொரு வீடு நாடக எழுத்துருவில் பின்வரும் விடயங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ள முறைமையைத் தெளிவுபடுத்துக.

(i) பாத்திரப்படைப்பு (அ) மாசிலன் (02 புள்ளிகள்)

(ஆ) மையுண்ட நெடுங்கண்ணாத்தை (02 புள்ளிகள்)

(ii) பெருங்காட்சிப் பண்பு (04 புள்ளிகள்)

(iii) உணர்ச்சி வெளிப்பாடு (04 புள்ளிகள்)

**5.** (i) 'நடிப்பு' என்ற பதத்திலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? (03 புள்ளிகள்)

(ii) நடிப்பினை சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு அவசியமான திறன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக (04 புள்ளிகள்)

(iii) நடிப்பினை விருத்தி செய்வதற்கு நடிப்புப் பயிற்சிகள் துணைபுரிகின்ற முறைமையினை நடிப்பு அனுபவத்தினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

**6.** (i) உமது பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்காற்றுகைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்டவற்றுள் யாதாயினும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அம்சங்கள் பிரயோகிக்கப்படும் முறைமையைத் தெளிவுபடுத்துக.

(அ) நிகழ்த்தப்படும் முறைமை (03 புள்ளிகள்)

(ஆ) அரங்க வெளி (03 புள்ளிகள்)

(இ) ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம் (03 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் யாதாயினும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலக்குப் பார்ப்போர் (04 புள்ளிகள்)

(ii) மேடைக்குறிப்பு (04 புள்ளிகள்)

(iii) கூட்டுப் புதிதளித்தல் (04 புள்ளிகள்)

(iv) மோதுகை (04 புள்ளிகள்)

(v) சொல்லாடல் (04 புள்ளிகள்)

* * *



For More Past Papers : tamilguru.lk

# நாடகமும் அரங்கியலும் II

1. சுருக்கமான விடை தருக.

i. அரங்கச் செயற்பாட்டில் நிதி, நிர்வாகம் மற்றும் தொடர்பாடல் திறன் போன்றவற்றோடு அதிக தொடர்புடையவர் யார்?
- தயாரிப்பாளர் (01 புள்ளி)

ii. கோலம் ஆற்றுகை நிகழ்த்தப்பெறும் அரங்க வெளியின் பெயர் யாது?
- தானாயம் பொல / வாடிவீட்டு முற்றம் (01 புள்ளி)

iii. கூத்தினை நெறிப்படுத்துபவர் எப்பெயரால் அழைக்கப்படுவார்?
- அண்ணாவியார் (01 புள்ளி)

iv. யப்பானிய நாடகங்களைப் பார்க்கும் ஒருவருக்குக் கிடைக்கும் அனுபவம் யாது?
- யூஜின் / யூஜென் (01 புள்ளி)

v. ஊமச் செயற்பாட்டின் போது அதிகளவில் வெளிப்படுத்தப்படும் சித்திரிப்பு யாது?
- உடல்வழிச் சித்திரிப்பு (01 புள்ளி)

vi. திரௌபதி அம்மன் சடங்குடன் தொடர்புடைய மலையகக் கூத்து ஒன்றின் பெயர் தருக.
- அர்ச்சுனன் தபசு (01 புள்ளி)

tamilguru.lk

vii. "மொட்டைத் தலையுடன் ஒற்றைப் பிராமணன் முன்னிதோ வாறானே ...." எனும் பாடல் இடம்பெறும் நாடகத்தின் பெயர் யாது?
- பூதத்தம்பி (01 புள்ளி)

viii. "நாமிருக்கும் நாடு நமது" எனும் நாடகத்தின் ஆசிரியர் யார்?
- கவிஞர். இ. முருகையன் (01 புள்ளி)

ix. பொட்டொளியின் இரு வகைகளையும் குறிப்பிடுக.
- அசையும் பொட்டொளி
- அசையாப் பொட்டொளி (02 புள்ளிகள்)

x. நாடகத்தின் பிரதான மோடிகளைக் குறிப்பிடுக.
- யதார்த்தம்
- யதார்த்தம் சாராதது / யதார்த்த விரோதம்

(02 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**



For More Past Papers : tamilguru.lk

2. i. **நெறியாள்கை எனும் எண்ணக்கருவினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

- கருத்து நிலையிலுள்ள நாடகாசிரியரது / நெறியாளரது சிந்தனைகளுக்கு நடிகனை ஊடகமாகக் கொண்டு பார்ப்போர் முன்னிலையில் காட்சி வடிவம் வழங்கும் செயல் முறையை நெறியாள்கை எனலாம்.

  (இது சார்ந்து விடை எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

(03 புள்ளிகள்)

ii. **நடிபாகமளித்தலில் நெறியாளர் ஒருவரின் வகிபங்கினைக் குறிப்பிடுக.**

- பொருத்தமான அரங்கப் பயிற்சிகளை மேற்கொள்ளல்.
- பாத்திரத்தின் பௌதிக, உளவியல், சமூகவியல் பண்புகளைக் கருத்திற் கொண்டு பாத்திரத் தெரிவினை பொருத்தமாக மேற்கொள்ளல்.
- நடிகரின் விசேட திறன்களைக் கவனத்தில் கொள்ளல்.
- நாடக எழுத்துருவை நன்கு வாசித்தல்.
- பாத்திரங்களை இனங்காணலும் அவற்றின் பண்புகளைப் புரிந்து கொள்ளலும்.
- நியம அன்றேல் நியமமில் முறையிலான நடிகர் தெரிவு நுட்பங்களைக் கையாண்டு நடிபாகமளித்தல்.

(04 புள்ளிகள்)

iii. **நாடக மூலக்கூறுகளை இணைப்பாக்கம் செய்வதில் நெறியாளர் ஒருவரின் படிமுறைச் செயற்பாட்டினை உமது அரங்க அனுபவத்தினூடாக விளக்குக.**

- எழுத்துருப் பகுப்பாய்வும் திட்டமிடலும்
- நடிகர் தெரிவும் நடிபாகமளித்தலும்
- அரங்க மூலகங்களின் இணைப்பாக்கம் (ஒத்திகைகள் மேற்கொள்ளல்)
- வகுப்பறை அனுபவங்களுடன் பொருத்தி விடையளிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயின் 05 புள்ளிகளும் பரீட்சார்த்தியின் விடையளிப்பில் அனுபவம் ஓரளவு தென்படின் 04 புள்ளிகளும் வகுப்பறை அனுபவங்கள் இல்லாத விடைகளுக்கு 03 புள்ளிகளும் வழங்கப் பெறலாம்.

(05 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

tamilguru.lk



For More Past Papers : tamilguru.lk

3. i. **நாடகத்தில் கையாளப்படும் துணைக்கலைகள் மூன்றினைக் குறிப்பிடுக.**
   - வேடவுடை, காட்சியமைப்பு, ஒப்பனை, இசை, நடனம், ஒலி, ஒளி, மேடைப்பொருள்கள் இவை சார்ந்த விடைகள் ஏதாவது மூன்றினைக் குறிப்பிட்டிருத்தல்.

(03 புள்ளிகள்)

ii. **நாடகத்தயாரிப்பு ஒன்றில் துணைக் கலைகளைத் திட்டமிடும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.**
   - நாடகத்தின் மோடி
   - கதைக்கரு
   - சூழல்
   - நாடக வகை
   - நாடகத்தின் மனநிலை
   - கதைக் காலம்
   - பண்பாட்டுப் பின்புலம்
   - கிடைக்கத்தக்க வளம்

(04 புள்ளிகள்)

iii. **அரங்க அழகியலில் துணைக் கலைகளின் முக்கியத்துவத்தினைச் செய்முறை அனுபவத்தின் ஊடாக விளக்குக.**
   - ஆற்றுகையை வலுப்படுத்துவதில் துணைக்கலைகளின் முக்கியத்துவம்.
   - ஆற்றுவோர் பார்ப்போர் ஊடாட்டத்தை வலுப்படுத்துவதில் துணைக் கலைகளின் பங்களிப்பு
   - ஆற்றுகையின் தாக்க வன்மைக்கு துணைக் கலைகளின் பங்களிப்பு ( அரங்க அனுபவத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட வேண்டும்.)

அரங்க அனுபவத்துடனான விடையளிப்பிற்கு 05 புள்ளிகளும், அரங்க அனுபவம் ஓரளவு தென்படின் 04 புள்ளிகளும், அனுபவம் குறிப்பிடப்படாதவிடத்து 03 புள்ளிகளும் வழங்கவும்.

(05 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

4. மஹாகவி து. உருத்திரமூர்த்தியால் எழுதப்பெற்ற புதியதொரு வீடு நாடக எழுத்துருவில் பின்வரும் விடயங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ள முறைமையைத் தெளிவுபடுத்துக.

i. **பாத்திரப் படைப்பு**
   **(அ) மாசிலன்**
   **(ஆ) மையுண்ட நெடுங்கண்ணாத்தை**

**(அ) மாசிலன்**
   - பாத்திரத்தின் பௌதிக, உளவியல், சமூகவியல் பண்புகள்
   - ஏனைய பாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் பண்புகள் (02 புள்ளிகள்)


For More Past Papers : tamilguru.lk

**(ஆ) மையுண்ட நெடுங்கண்ணாத்தை**

- பாத்திரத்தின் பௌதிக, உளவியல், சமூகவியல் பண்புகள்
- நாடகத்தின் கதையை வளர்த்துச் செல்வதில் பாத்திரத்தின் பங்கு
- நாடக மோதுகையை வலுப்படுத்துவதில் பாத்திரத்தின் பங்களிப்பு

(02 புள்ளிகள்)

ii. **பெருங்காட்சிப் பண்பு**

எழுத்துருவிற்கு ஊடாக மேற்கிளம்பும் காட்சிப் படிமங்கள், பாத்திரங்கள் மூலமான காட்சிப் படைப்பாக்கம் (கடற்கரை, கோயில், வீடு)

(04 புள்ளிகள்)

iii. **உணர்ச்சி வெளிப்பாடு**

- நாடகக் கதையினை வளர்த்துச் செல்வதில் உணர்ச்சிக் கட்டங்களின் முக்கியத்துவம்.
- ஆற்றுவோர் மற்றும் பார்ப்போர் நிலையிலான உணர்ச்சி வெளிப்பாடு
- பாத்திரங்கள், சூழமைவுகளின் வெளிப்பாடு
- சந்தோசம், கோபம், கவலை, வெளிப்படும் சந்தர்ப்பங்களை குறிப்பிட்டு விளக்குதல். எதிர்பார்க்கப்படுகிறது.

  உதாரணம் :

  திருமணம் – சந்தோசம்

  நெடுங்கண்ணாத்தையின் வார்த்தைப் பிரயோகம் – கோபம்

  மாயன் மன்னவனை அழைத்துச் செல்லல் – கவலை

(04 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

tamilguru.lk

5. i. **'நடிப்பு' என்ற பதத்திலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?**

- நடிப்பு என்பது உடல், உளம், குரல் இணைந்த ஒத்திசைவின் மூலம் ஏதோவொரு விடயத்தை வெளிக்கொணர்தல் / சித்திரித்தல் ஆகும். இன்னொரு ஆளாகி பாத்திரத்தை சித்தரித்தல். இது சார்ந்து விடை எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

(03 புள்ளிகள்)

ii. **நடிப்பினை சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு அவசியமான திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- உடல் சார்ந்த திறன்
- குரல் சார்ந்த திறன்
- உளம் சார்ந்த திறன்
- செயலியக்கம் சார்ந்த திறன்
- தொடர்பாடல் திறன்
- புதிதளித்தல் சார்ந்த திறன் மற்றும் உள்ளார்ந்த ஆற்றல், கற்பனைத் திறன், அவதானம், கிரகித்தல், செவிமடுத்தல், படைப்பாக்கம்.
- திசை மட்டம், பரப்பு, சமநிலை போன்ற நடிப்பு நுட்ப ஆற்றல்.

  (இவற்றில் 4 இனை குறிப்பிடல்)

(04 புள்ளிகள்)



For More Past Papers : tamilguru.lk

iii. **நடிப்பினை விருத்தி செய்வதற்கு நடிப்புப் பயிற்சிகள் துணைபுரிகின்ற முறைமையினை நடிப்பு அனுபவத்தின் ஊடாக விளக்குக.**

- நடிகர் பெறுகின்ற அத்தியாவசிய பயிற்சிகளைக் குறிப்பிட்டு அப்பயிற்சிகள் உதவுகின்ற முறைமையினை பரீட்சார்த்தி தனது அனுபவத்தினூடாக விளக்கல்.
- உடல் உளத் தளர் நிலைப் பயிற்சிகள், குரல் மற்றும் பேச்சுப் பயிற்சிகள்.
- சுவாசப் பயிற்சி, உள ஒருமைப்பாட்டுப் பயிற்சி, புலனுணர்வுப் பயிற்சி.
  இப்பயிற்சிகள் பரீட்சார்த்தியின் அனுபவத்துடன் தொடர்புபடுத்திக் குறிப்பிடப்படல்.
  நடிப்பு அனுபவத்துடன் தரப்படும் விடைகளுக்கு 05 புள்ளிகளும், ஓரளவு நடிப்பு அனுபவம் வெளிப்பட்டால் 04 புள்ளிகளும், நடிப்பு அனுபவம் குறிப்பிடப்படாவிட்டால் 03 புள்ளிகளும் வழங்கவும்.

(05 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

6.

i. **உமது பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்காற்றுகைகள் மூன்றினைக் குறிப்பிடுக.**

- சூரன் போர்
- வேட்டைத் திருவிழா
- பாண்டவர் வனவாசம்
- பாஸ்கா
- குளிர்த்தி
- ரட்டயக்கும
- மற்றும் பிற
  (இவற்றில் மூன்றினைக் குறிப்பிடல்) (03 புள்ளிகள்)

tamilguru.lk

ii. **மேலே (i) இல் நீர் குறிப்பிட்டவற்றுள் யாதாயினும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அம்சங்கள் பிரயோகிக்கப்படும் முறைமையைத் தெளிவுபடுத்துக.**

**(அ) நிகழ்த்துகை முறைமை**

- போலச் செய்தல்
- பாத்திரமேற்றல் / ஆள் மேற்கொள்ளல் / கோலங் கொள்ளல்
- ஆடல், பாடல், வடிவம், கதை
- செயல்கள் (03 புள்ளிகள்)

**(ஆ) அரங்க வெளி**

- ஆற்றுகை நிகழும் வெளியின் இயல்பு
- ஆற்றுகை வெளியின் பண்புகள் நிகழ்த்துகை முறையில் ஏற்படுத்தும் தாக்கம்

(03 புள்ளிகள்)

**(இ) ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம்**

- பார்ப்போரின் இயல்பும் – பங்கு கொள்ளலும்
- ஆற்றுகையின் தாக்கம் பார்ப்போரில் செல்வாக்கு செலுத்தும் விதம்
- ஆற்றுவோர் – பார்ப்போர் தாக்க மறுதாக்கம்

(03 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**


For More Past Papers : tamilguru.lk

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

**i. இலக்குப் பார்ப்போர்**

- பார்ப்போர் என்பதன் பொருள் விளக்கம்
- இலக்குப் பார்ப்போர் என்பதன் விளக்கம்
- இலக்குப் பார்ப்போரின் பண்புகள்
- ஆற்றுவோருக்கும் பார்ப்போருக்குமிடையிலான ஊடாட்டம்
- வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் பார்ப்போரின் செல்வாக்கு

போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(04 புள்ளிகள்)

**ii. மேடைக்குறிப்பு**

- மேடைக்குறிப்பு என்பதன் விளக்கம்
- மேடைக்குறிப்பினுள் உள்ளடக்கப்படக்கூடிய அம்சங்கள்
- நாடக எழுத்துருவாக்கத்தின் போது மேடைக்குறிப்பின் முக்கியத்துவம்.
- நாடகத் தயாரிப்பிற்கு மேடைக் குறிப்புக்களின் பங்களிப்பு

போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. (04 புள்ளிகள்)

**iii. கூட்டுப் புதிதளித்தல்**

- கூட்டுப் புதிதளித்தல் என்பதன் விளக்கம்
- புதிதளித்தலுக்கான நுட்பங்கள்
- புதிதளித்தலின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்
- சூழமைவு, பாத்திரம், பொருள், நிகழ்ச்சி என்பன தொடர்பான புதிதளித்தல்கள்.
- அரங்கத் தயாரிப்பின் போது புதிதளித்தலின் பங்களிப்பு
- கூட்டாகப் புதிதளிக்கும் போது ஏற்படும் ஒருமைப்பாட்டம்சங்கள்

போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(04 புள்ளிகள்)

**iv. மோதுகை**

- மோதுகை என்பதன் விளக்கம்
- நாடகத்தில் மோதுகையின் முக்கியத்துவம்
- மோதுகை நிலைமைகள்
- மோதுகை வளர்த்தெடுக்கப்படும் விதம்

போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(04 புள்ளிகள்)

**v. சொல்லாடல்**

- சொல்லாடல் என்பதன் விளக்கம்
- சொல்லாடலின் முக்கியத்துவம்
- சொல்லாடலின் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்
- சொல்லாடல் நுட்பங்கள்
- நாடகத்தில் சொல்லாடலின் பங்களிப்பும் தாக்கவன்மையும்

போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(04 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**



For More Past Papers : tamilguru.lk